DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | 142/2019 |
| S.C. “ | : | |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சேக் மீரா உசேன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11.09.2024

**முதல் விசாரனை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். காரைக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண்:195/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. விபத்து வாகனமான TN 65 S 4434 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ.2. எனக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே படம் ம.சா.ஆ.3. காரைக்குடி PKN மருத்துவமனையில் எனக்கு வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.4. மேற்படி மருத்துவமனையில் 15.06.2019 தேதியில் வழங்கப்பட்ட மருத்துவ செலவினங்களுக்கான பில் ம.சா.ஆ.5 (அதன் கூட்டுத் தொகை ரூ.46,000/-). காரைக்குடி இராமசுப்பு பிசியோதெரபி மருத்துவமனையில் நான் சிகிச்சை மேற்கொண்டதற்காக ரூ.75,000/- செலுத்ததிற்கான சான்றிதழ் ம.சா.ஆ.6. என்னுடைய ஓட்டுநர் உரிமம் ம.சா.ஆ.7. எனது வாகனத்திற்கான பதிவுச் சான்றிதழ் ம.சா.ஆ.8. எனது வானத்திற்கான காப்பீட்டுச் சான்றிதழ் ம.சா.ஆ.9. என்னுடைய ஆதார் அட்டை ம.சா.ஆ.10. என்னுடைய இருசக்கர வாகனம் பழுதுநீக்க ஏற்பட்ட செலவு ரூ.22,991/-க்கான எஸ்டிமேட் ம.சா.ஆ.11. நான் வழக்கறிஞர் தொழில் செய்வதைக்

காட்டக்கூடிய Enrolment certificate ம.சா.ஆ.12. என்னுடைய வழக்கறிஞர் அடையாள அட்டை ம.சா.ஆ.13. என்னுடைய வங்கிக் கணக்குப்புத்தகம் ம.சா.ஆ.14. நான் காரைக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் குற்ற எண்:41/2018 வழக்கில் ஆஜரானதற்கான குறிப்பாணை ம.சா.ஆ.15. நான் திருவாடானை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் நான் கொடுத்த நாளிதழ் அறிவிப்பு ம.சா.ஆ.16. தேவகோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.126/2012 வழக்கில் நான் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை ம.சா.ஆ.17. கடந்த 06.02.2018 தேதியில் நான் வழக்கறிஞராக என் கட்சிக்காரருக்காக கொடுத்த சட்ட அறிவிப்பு ம.சா.ஆ.18. மேற்படி அறிவிப்புக்காக எனக்கு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு ம.சா.ஆ.19. நான் 2019ம் ஆண்டு உரிமையியல் நீதிபதிக்கான தேர்வுக்கு நான் விண்ணப்பித்த விண்ணப்பம் ம.சா.ஆ.20. அரசு உதவி குற்றவியல் வழக்கிறஞருக்கான என்னுடைய தேர்வுகூட அனுமதிச் சீட்டு ம.சா.ஆ.21. கடந்த 17.05.2019 தேதியில் நான் நியூ இந்திய அஸ்சூரன்ஸ் கம்பெனியில் செலுத்திய காப்பீட்டு சான்றிதழ் ம.சா.ஆ.22. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

இந்த விபத்து 02.06.2019ம் தேதி நடந்தது. விபத்து சமய்த்தில் நான் எனக்குச் சொந்தமான இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றேன். எனது வாகனம் TN 65 S 4434. விபத்து சமயத்தில் நான் தெற்கிலிருந்து வடக்காக சென்றேன். நான் என்னுடைய அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். எனக்கு விபத்து ஏற்படுத்திய வாகனம் வெள்ளை நிறக்கார் ஆகும். அது என்ன கார் என்று தெரியாது. போலிசார் மேற்படி காரை கண்டுபிடிக்கமுடியவில்லை என்று கூறிவிட்டார்கள். முதல் தகவல் அறிக்கை விபத்து நடந்து நான்கு நாள்கள் கழித்து பதிவு செய்தார்கள். நான் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். எனக்கு வலது தோள்பட்டையிலும், வலது காலில் சுண்டுவிரலில் கணிந்த காயமும், வலது முழங்காலில் காயமும் ஏற்பட்டது. எனக்கு கையிலோ, காலிலோ தகடு எதுவும் பொறுத்தப்படவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறிவிட்டன. ஆனால், கடுமையாக வேலைப் பார்த்தால் வலி எடுக்கிறது. நான் என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் Compulsory Personal Accident coverage for Owner cum Driver என்ற காலத்தில் ரூ.15 லட்சத்திற்கான பிரீமியம் செலுத்தியுள்ளேன். மேற்படி ரூ.15 லட்சமானது விபத்தில் இறந்தவருக்குத்தான் கிடைக்கும் என்றும், சிறு காயத்திற்கு கிடைக்காது என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவபில்கல் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. நானாகத்தால் இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால்

சரியல்ல. எனவே, காப்பீட்டு நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.